# 13 சுந்தரர் தேவாரம்



## அ.தேவாரம் - 1

சுந்தரமூர்த்தி நாயனாருக்குப் பெற்றோர் நிச்சயித்திருந்த திருமணத்தைச் சிவபெருமான் நிகழாமல் தடுத்து அவரை ஆட்கொண்டருளினார். அதன் பின்னர் நாயனார், கோயில் தோறும் சென்று சிவபெருமானைப் பாடிப் பரவி வந்தார். திருவாரூரிலே பரவையாரைத் திருமணஞ் செய்து, இல்லறத்தில் ஒழுகும் நிலையை சிவபெருமான் அவருக்கு வழங்கினார்.

இவர்களின் இல்வாழ்க்கைக்கு வேண்டிய நெல் முதலியவற்றைக் குண்டையூர்க்கிழார் என்னும் செல்வர் அனுப்பிவந்தார். ஒருகாலத்தில் மழைவளம் சுருங்கியது. எனவே சுந்தரருக்கு அனுப்புவதற்கு அந்தச் செல்வரிடம் போதிய நெல் இருக்கவில்லை. அப்போது செல்வர் இறைவனை வேண்டியதனாற் குண்டையூர் முழுவதும் நெல் மலையாகக் குவிந்தது. இதனை மனிதரால் எடுத்துச் செல்ல முடியாது.குண்டையூர்க்கிழார் சுந்தரரிடம் சென்று இச்செய்தியை அறிவித்தார்.

சுந்தரர் குண்டையூருக்கு அருகில் இருந்த திருக்கோளிலி எனும் தலத்துக்குச் சென்று பதிகம் பாடினார். அதில் அமைந்த முதற்பாடல் கீழே தரப்பட்டுள்ளது.

**தலம் - திருக்கோளிலி** **பண் - நட்டராகம்**

**திருச்சிற்றம்பலம்**

**நீள நினைந்து அடியேன் உமை நித்தலும் கைதொழுவேன்**
**வாள் அன கண் மடவாள் அவள் வாடி வருந்தாமே**
**கோளிலி எம்பெருமான் குண்டையூர்ச் சில நெல்லுப் பெற்றேன்**
**ஆள் இலை எம்பெருமான் அவை அட்டித்தரப் பணியே.**



**திருச்சிற்றம்பலம்**

## பொழிப்பு

திருக்கோளிலி என்னும் திருக்கோயிலில் எழுந்தருளிய எம்பெருமானே! நான் எப்போதும் உம்மை நினைத்து, கைகூப்பிக் கும்பிடும் அடியவன். வாள் போலக் கூர்மையான கண்கள் உள்ள பரவையார் மனச் சோர்வும் உடல் வருத்தமும் அடையாமல் வாழ வேண்டும் என்பதற்காகக் குண்டையூரில் கொஞ்சம் நெல்லைப் பெற்றுள்ளேன். ஆயினும் அந்த நெல்லைக் குண்டையூரிலிருந்து பரவையாரின் மாளிகைக்குக் கொண்டு வர உதவியாள் யாரும் கிடைக்கவில்லை. அந்த நெல்லைக் கொண்டு செல்வதற்கு அருள் புரிவீராக.

## அரும்பதம்

| | | |
|---|---|---|
| நித்தலும் | - | தினமும்/எப்போதும் |
| நீள | - | தொடர்ந்து |

## பயிற்சி

1. இத்தேவாரம் சுந்தரரால் எச் சந்தர்ப்பத்தில் பாடப்பட்டது?
2. 'வாளன கண்மடவாள்' என்ற தொடர் யாரைக் குறிப்பிடுகிறது?
3. சுந்தரருக்கும், இறைவனுக்கும் இடையிலான உறவு இப்பாடலினூடாக எவ்வாறு புலப்படுகிறது?

## ஆ.தேவாரம் - 2

திருவாரூர்க் கோயிலின் முன் ஆயிரங்கால் மண்டபம் ஒன்று உள்ளது. அது தேவாசிரியன் மண்டபம் எனப்படும். சுந்தரமூர்த்தி நாயனார் அங்கு கூடியிருந்த சிவனடியார்களை வணங்கித் தாம் அவர்கள் எல்லோருக்கும் அடியவன் என்று கூறினார். அவர்களைப் போற்றித் திருப்பதிகம் ஒன்று பாடினார். அதுவே திருத்தொண்டத் தொகை எனப்படும். அதிலே தம்மைத் தவிர்த்து அறுபத்திரண்டு தனியடியார்களைப் பெயர் கூறியும் ஒன்பது தொகையடியார்களைப் பெயர் குறியாமல் பொதுவாகவும் பாடியுள்ளார். அடியார்கள் பற்றிப் பாடப்பட்ட முதல் நூல் இதுவாகும். இதனை அடிப்படையாக கொண்டு சேக்கிழார் பெரியபுராணத்தைப் பாடினார்.

தில்லைவாழ் அந்தணர், அப்பாலும் அடிசார்ந்தார், சித்தத்தைச் சிவன்பாலே வைத்தார், முழுநீறுபூசிய முனிவர் முதலானோர் தொகையடியார்கள். இங்கு, திருத்தொண்டத் தொகைப் பதிகத்தில் முதலாவது தேவாரம் தரப்பட்டுள்ளது.

## திருத்தொண்டத்தொகை

**தலம் - திருவாரூர்** *திருச்சிற்றம்பலம்* **பண் - கொல்லிக்கௌவாணம்**

**தில்லைவாழ் அந்தணர்தம் அடியார்க்கும் அடியேன்**
**திருநீல கண்டத்துக் குயவனார்க்கு அடியேன்**
**இல்லையே என்னாத இயற்பகைக்கும் அடியேன்**
**இளையான்தன் குடிமாறன் அடியார்க்கும் அடியேன்**
**வெல்லுமா மிகவல்ல மெய்ப்பொருளுக்கு அடியேன்**
**விரிபொழில்சூழ் குன்றையார் விறன்மிண்டற்கு அடியேன்**
**அல்லிமென் முல்லையந்தார் அமர்நீதிக்கு அடியேன்**
**ஆரூரன் ஆரூரில் அம்மானுக்கு ஆளே.**

*திருச்சிற்றம்பலம்*

### பொழிப்பு

தில்லை நடராசப்பெருமானின் அடியார்களாகிய தில்லைப்பதி வாழ் அந்தணர்களுக்கும் அடியேனாவேன். குயவர் குலத்தவரான திருநீலகண்ட நாயனாருக்கும் அடியேன். சிவனடியார்களுக்கு எதனையும் இல்லை என்று கூறாத இயற்பகை நாயனாருக்கும் அடியேன். இளையான் குடிமாறன் அடியாருக்கும் அடியேன். வெற்றி பெறுவதில் மிக வல்லவரான மெய்ப்பொருள் நாயனாருக்கும் அடியேன். பெருஞ் சோலைகள் சூழ்ந்த திருச்செங்குன்றூரவரான விறன்மிண்ட நாயனாருக்கும் அடியேன். அல்லிப்பூவும் மென்மையான முல்லைப்பூவும் கலந்துகட்டிய மாலை அணிந்த அமர்நீதி நாயனாருக்கும் அடியேன். அத்தகைய ஆரூரனாகிய அடியேன் திருவாரூரில் எழுந்தருளியிருக்கும் பெருமானால் ஆட்கொள்ளப்பட்டவனாவேன்.

## அரும்பதம்

| | | |
|---|---|---|
| பொழில் | - | சோலை |
| ஆரூரன் | - | சுந்தரர், நம்பியாரூரர் |

## பயிற்சி

1. இப்பாடல் பாடப்பெற்ற சந்தர்ப்பத்தைத் தருக.
2. இப் பாடலில் இடம்பெற்றுள்ள நாயன்மார்கள் யாவர்?
3. அவர்களைச் சிறப்பித்துக் கூறும் அடைமொழிகளைக் குறிப்பிடுக.
4. அடியார்கள் பற்றிப் பாடப்பெற்ற முதல்நூல் யாது? அதைப் பாடியவர் யார்?

## குழுச் செயற்பாடு

வகுப்பறையில் தேவாரங்களைப் பண்ணோடு பாடுங்கள்.